# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

************

முறையீட்டு மனு எண் 357/2016/பே.2

ஆணை எண்.293/2017/ நாள் –22–12–2017

திரு. ஐ. புகாரி,
21, முதல் தெரு,
காந்தி நகர்,
அச்சிறுப்பாக்கம்,
காஞ்சீபுரம் மாவட்டம். —— முறையீட்டு மனுதாரர்.

1.திரு ஏ. சீனுவாசன்,
முன்னாள் 6வது வார்டு உறுப்பினர்
அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி.
2.திருமதி ராஜலட்சுமி பாஸ்கரன்,
முன்னாள் 12வது வார்டு உறுப்பினர்,
அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி,
காஞ்சீபுரம் மாவட்டம். —— எதிர் மனுதாரர்கள்.

## ஆணை

காஞ்சிபுரம் மாவட்டம், அச்சிறுப்பாக்கம் பேரூராட்சியினைச் சேர்ந்த திரு ஐ. புகாரி என்பவரின் 25.03.2013 ம் தேதியிட்ட முறையீட்டு மனு பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண் ந.க.எண். 12209/2013/இ.2/நாள் 21.04.2016ன்மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் 28.04.2016ல் பெறப்பட்டு முறையீட்டு மனு எண் 357/2016 ஆக பதிவு செய்யப்பட்டது.

முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனுவினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவம் (மனு செய்தல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதிகள் 2015,

விதி 6-ன்படி ரூ 10/-க்கான நீதிமன்ற வில்லைக் கட்டணத்துடன் உரிய படிவத்தில் (படிவம்.1) பூர்த்தி செய்து அனுப்பக் கோரி இம்முறைமன்ற நடுவ 02.05.2016-ம் நாளிட்ட அறிவிப்பாணையில் ஆணையிடப்பட்டது. ஆனால் மேற்படி மனு உரிய முறையில் இம்முறை மன்ற நடுவத்தில் மனுதாரரால் தாக்கல் செய்யப்படவில்லை.

இருப்பினும் இம்முறைமன்ற நடுவ 07.12.2016 நாளிட்ட அழைப்பாணையின்படி மேற்படி முறையீட்டு மனு தொடர்பான நேரடி விளக்கத்தினை பெறும் பொருட்டு இம்முறைமன்ற நடுவத்தில் 24.01.2017 அன்று நேரில் ஆஜராக கோரி முறையீட்டு மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை அனுப்பக்கோரி இம்முறைமன்ற நடுவ எண் 357/2016/பே.2/நாள் 07.12.2016 மற்றும் 14.02.2017ன்படி பேரூராட்சி செயல் அலுவலர், அச்சிறுப்பாகம் அவர்களுக்கு ஆணையிடப்பட்டது.

24.01.2017 அன்று தனது நேரடி விளக்கத்தினை பதிவு செய்ய முறையீட்டு மனுதாரர் ஆஜராகாத நிலையினைக் கருதி அவருக்கு கூடுதல் வாய்ப்பு அளித்து 11.09.2017ல் ஆஜராகி தனது விளக்கத்தினை பதிவு செய்யுமாறு இம்முறைமன்ற நடுவ 02.09.2017ம் நாளிட்ட அழைப்பாணைமூலம் ஆணையிடப்பட்டது.

மேற்படி அழைப்பாணைக்கு முறையீட்டு மனுதாரர் தனது 09.09.2017ம் நாளிட்ட மின்னஞ்சல் கடிதத்தில் தனக்கு உடல் நிலை சரியில்லாததால் 11.09.2017 அன்றைய விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை எனவும், மேலும் மேற்படி முறையீட்டு மனுவினை தான் எழுதவும் இல்லை, மற்றும் நேரில் புகார் எதுவும் அளிக்கவில்லை எனவும் தெரிவித்து உள்ளார்.

இதனிடையே அச்சிறுப்பாகம் பேரூராட்சி செயல் அலுவலரை 06.11.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி மேற்படி முறையீட்டு மனு சம்பந்தமான தனது தரப்பிலான விளக்கத்தினை சமர்ப்பிக்க இம்முறைமன்ற நடுவ 12.09.2017ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

அதன்படி அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர், ஆஜராகி தனது அறிக்கையினை (எண்158/2017/நாள்11.10.2017) இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளதுடன் கீழ்கண்டவாறான தனது நேரடி வாக்குமூலத்தினையும் பதிவு செய்துள்ளார்.

......"திரு புகாரி என்பவருடைய மனு குறித்து விசாரித்ததில் மனுதாரர் தனது கடிதத்தில் தான் புகார் மனு ஏதும் அனுப்பவில்லை எனவும், தனது பெயரை பயன்படுத்தி யாரோ சில சமூக விரோதிகள் இந்த செயலை செய்து இருக்கிறார்கள் எனவும். தனக்கும் அந்த புகார் மனுவிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனவும் மனுதாரர் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ள 6-வது வார்டு கவுன்சிலர் திரு சீனிவாசன் இறந்து விட்டார் எனவும், திருமதி லீலாவதி பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் என்பது உண்மையல்ல எனவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். திருமதி லீலாவதி என்பவர் பெயரில் ஒப்பந்தக்காரர் யாரும் இல்லை எனவும், திருமதி லீலாவதி என்பவர் 12-வது வார்டு கவுன்சிலர் திருமதி ராஜலட்சுமி பாஸ்கரன், என்பவரின் மாமியார் ஆவார் எனவும் தெரிவித்துள்ளார். 2011 தேர்தலுக்கு முன்பாக ஒப்பந்தக்காரராக ஒப்பந்த பணிகள் எடுத்து செய்துள்ளதாகவும், 2011

தேர்தலின்போது ஒப்பந்தக்காரர் பணியில் இருந்து அவர் விடுவித்துக் கொண்டார் எனவும் தெரிவித்துள்ளார். கடந்த 6 ஆண்டுகளாக அவர் ஒப்பந்தக்காரராக இல்லை எனவும் பேரூராட்சி செயல் அலுவலர், அச்சிறுப்பாக்கம் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரராக மனுவில் குறிப்பிட்டுள்ள, திரு ஐ. புகாரி என்பவர், தனது 09.09.2017ம் நாளிட்ட கடிதத்தில் தான் மேற்படி புகார் மனுவினை எழுதவில்லை என உறுதிபடத் தெரிவித்துள்ளார். மேலும் இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 357/2016/பே.2/நாள் 02.05.2016ன்படி முறையீட்டு மனுவும் உரிய முறையில் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே உரிய விசாரணை மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு மேற்படி முறையீட்டு மனு முகாந்திரமற்றதென தள்ளுபடி செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர்.

-//உத்திரவின்படி - அனுப்பப்படுகிறது//-

பெறுநர்

1.செயல் அலுவலர்,
அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

2.பேரூராட்சிகளின் இயக்குநர்,
குறளகம்,
சென்னை

செயலாளர்க்காக